IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

O.S.No.27/2024

dated : 09.07.2025

P.W.1

Name தியாகராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் 47 வருடமாக பெங்களூரில் வேலை பார்த்து வந்ததால், அங்கு குடியிருந்து வருகிறேன். கடையம் என்னுடைய சொந்த ஊர் ஆகும். வழக்கு சொத்திற்கு எதிரே அரசுக்கு சொந்தமான அங்கன்வாடி, நியாயவிலைக்கடை உள்ளது என்றால் சரிதான். அங்கு அரசுக்கு சொந்தமான பெருமாள் கோவில் உள்ளது. பொட்டல்புதூர் - தென்காசி சாலையில் இருந்து சுமார் 50 கி.மீ தூரத்தில் வழக்கு சொத்திற்கு செல்லும் வழியில் சாலையின் மீது அரசுக்கு சொந்தமான இடத்தில் காவல்நிலையம் செயல்பட்டு வந்தது என்றால் சரிதான். அந்த சாலையில் அரசுக்கு சொந்தமான அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கிழக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். மெயின்ரோட்டில் இருந்து அந்த அரசு சுகாதார நிலையத்திற்கு செல்ல சற்று மேல்புறம் சென்று, வடக்கு நோக்கி சென்று பின்னர் மேற்காக திரும்பி அதன் பின்னர் அரசு ஆரம்ப சுகாதார கட்டிடத்திற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசுக்கு சொந்தமான அங்கன்வாடி,

நியாயவிலைக்கடை, காவல்நிலையம் உள்ள இடங்கள் அடிக்கடி நான் பார்த்த இடங்கள் என்றால் சரிதான். அந்த இடங்களை தற்போதும் அடையாளம் காட்ட இயலும். மெயின்ரோட்டில் இருந்து மருத்துவமனைக்கு செல்ல நுழைவு வாயில் உள்ளது என்றால் சரிதான். அது பெயர் பலகையுடன் கூடிய சிமெண்ட் வளைவு என்றால் சரிதான். பழைய காவல்நிலையம் கட்டிட தற்போதும் உள்ளது. நியாயவிலைக்கடை மற்றும் கோவில் தற்போதும் அப்படியே உள்ளது. மேற்படி இடங்களில் பல ஆண்டுகள் பழைமையான மரங்கள் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக கடையம் பகுதியில் நீர் வளம் மிகுந்த இடம் என்பதால், எல்லா அரசு காலி இடங்களிலும் மரங்கள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணத்தில் தபசில் விபரத்தில் 3 ல் 1 பங்கு எழுதிக் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1ல் எழுதிக் கொடுத்தவருக்கு பூர்விக பாத்திய சொத்து கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எழுதிக் கொடுத்தவருக்கு அது பூர்விகமாக பாத்தியப்பட்டது என்பதை உறுதி செய்ய வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்களுக்கு அதுபோன்ற ஆவணங்கள் இருந்ததா என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ-1ல் சங்கர் ஐயர், ராமசுப்பை ஐயர், இருவருக்கும் இடையே நடைபெற்ற பரிவர்த்தனை தொடர்பான ஆவணங்கள் எதுவும் உள்ளதால் என்றால் எனக்கு அது பற்றி எதுவும் தெரியாது. தபசில் சொத்து கடையம் பஞ்சாயத்து போர்டு ஏலத்தின் மூலம் கிடைத்தாக வா.சா.ஆ-1 அதில் கூறப்பட்டுள்ளது, அது குறித்த ஆவணங்களையும் நான் பார்த்தது இல்லை. வீட்டிற்கு தேவையான குடிநீர் வசதி

வழங்குவதற்கு பஞ்சாயத்தில் கிணறு வெட்டி நீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் அப்போது கடையத்தில் குடியிருக்கவில்லை என்பதால் எனக்கு அது பற்றி எனக்கு தெரியாது. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தொடங்கினேன் என்றால் எனக்கு பட்டா கேட்ட போது தரமுடியாது என்றும், மேல்முறையீடு செய்யும் படி சொன்னதால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் சொத்து விபரத்தின் என்னென்ன எல்கை விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியும். வா.சா.ஆ.1ல் அசல் ஆவணத்தினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அது என் வசம் இல்லை. உயில் எழுதிக் கொடுத்த என் தந்தை வா.சா.ஆ-2ல் என் தந்தைக்கு சுயமாக பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1ன் ஆவணத்தில் பதிவு எண் பற்றிய விபரங்கள் ஏதும் வா.சா.ஆ.2ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-2மும் அசல் ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் வழக்கறிஞரிடம் உள்ளது. வா.சாஆ-2 ல் உண்மை தன்மை பற்றி எழுதிக் கொடுத்தவர் மற்றும் எழுதி பெற்றவர் மட்டும் தான் கூறமுடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் சொத்தில் பஞ்சாயத்து போர்டு எண் 1093 100 D 6 என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் வா.சாஆ.1ல் கூறப்பட்ட 1093 100 D 6 என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கதவு எண் மாறியிருக்கலாம். அவ்வாறு கதவு எண் தற்போதைய கதவு எண்ணுக்கு ஒப்புவிப்பு பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு கட்டிடத்திற்கு

ஒரு கதவு எண் வழங்கப்பட வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் ஒரேவிதமான கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சில ரசீதுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது ஒரே ரசீதில் வெவ்வேறு கட்டிடத்திற்கு வழங்கப்பட்டதாக இருக்கலாம், ஒரு வரிவிதிப்பு எண்ணில் ஒரு ரசீது மட்டுமே வழங்க இயலும் என்றும், நான் தாக்கல் செய்த வா.சா.ஆ 3 வழக்குரை சொத்திற்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படாததாலும், அதிலுள்ள விபரங்கள் முரண்பாடாக உள்ளதாலும், அது பரிசீலணைக்குகந்த ஆவணம் இல்லை என்பதால் சரியல்ல. எனவே அதன் அடிப்படையில் ஏற்பட்டதாக கூறப்படும் வா.சா.ஆ.2, 3 ஆவணங்களும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் உள்ள ரசீதுகளில் பழைய மற்றும் புதிய எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சர்வே எண் 273-6 பில் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 ல் சர்வே எண் 273-6 ஏ நத்தம் என்று கூறப்பட்டுள்ளது, எங்கள் பெயரோ, மூதாதையர் பெயரோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-4 ல் 1987 முதல் நடைமுறையில் இருந்து வருவதால் அதில் மேற்கொண்ட பதிவுகள் தவறானது என்றும், அதை ரத்து செய்ய நான் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் அதற்காகதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1987 ஆண்டுக்கு பின்னர் 37 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 10 ஆண்டுகளாக தான் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன். 2010 ஆண்டு

ஊருக்கு வந்த பின்னர்தான் எனக்கு இந்த விபரம் தெரியவந்தது, அதிலிருந்து பட்டா, மேல்முறையீடு நடவடிக்கை எடுத்து வருகிறேன். அவ்வாறு நான் மேற்கொண்ட நடவடிக்கைகான அசல் ஆவணங்களை குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. முறையான ஆவணங்கள் ஏதும் இல்லை என்பதால் வா.சா.ஆ.5 ல் எனக்கு பட்டா வழங்க இயலாது என உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வருவாய் ஆட்சியர் தங்களால் முடிவு எடுக்க இயலவில்லை என்று கூறியுள்ளார். புல எண் 273-6 பில் யூனியன் ஆபிஸ் என்று உள்ளது என்றால் சரிதான். 1986 ல் அவ்வாறு பதிவு மேற்கொள்ளப்பட்டதாக காணப்படுகிறது. பொதுவாக விவசாயம் நடைபெறும் இடங்கள் பற்றி ஆவணத்தில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். புல எண்கள் 273-6 ஏ, 273-6 பில் விவசாயம் நடைபெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புல எண் 273- 6 ஏ நத்தம் என்றும், 273-6 பி யூனியன் ஆபிஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 2 வது அட்டவணை சொத்தை என் மகளுக்கு கொடுத்துள்ளேன், அதற்கான ஆவணத்தினை குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. என் பெயரிலுள்ள நத்தம் பட்டா எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான. அதுபோன்ற ஆவணங்கள் என் பெயரில் இல்லை. வா.சா.ஆ 8, 9 ஆவணங்களுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அரசின் பாதுகாப்பில் இருந்த சொத்தை என் பாதுகாப்பில் இருந்ததை போல் மற்றொரு பூட்டை போட்டு அதன் பின்னர் ஆணையர் வரும்போது என் அனுபத்தில் இருந்த சொத்தாக காட்ட முயற்சித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 வது அட்டவணை சொத்து முழுவதும் 1 ம்

பிரதிவாதியின் பாதுகாப்பு கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரத்திற்கு நான் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணங்களும் உதவக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. அந்த சொத்து அரசுக்கு சொந்தமானது என்றும், அதை பொதுமக்கள் அவசியமான கட்டிடங்களை கட்ட ஏற்பாடு செய்வதை அறிந்து அவசரமாக இந்த தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.09 16:41:45 +0530